வெற்றிக் கடவுள்

பிள்ளையார்



கழக வெளியீடு



உ

வெற்றிக் கடவுள் பிள்ளையார்

★

முதற் பதிப்பு ஆக. 1976.
நான்காம் பதிப்பு திசம்பர் 1976.
கழக வெளியீடு: ௧௬௧௮

★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

சென்னை-1. திருநெல்வேலி-6. மதுரை-1.
கோயமுத்தூர்-1. கும்பகோணம்-1. திருச்சிராப்பள்ளி-2.

பதிப்புரை

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா" என்பது முதுமொழி. இங்கே கோயில் என்பது பெரும்பாலும் பிள்ளையார் கோயிலையே குறிக்கும். ஏனெனில் மற்றெந்தக் கோயில் இல்லாவிடினும் பிள்ளையார் கோயில் இல்லாத ஊரோ சிற்றூரோ காண முடியாது. அதுமட்டுமா? பிள்ளையார் மாடம் இல்லாத வீடே கிடையாது என்று கூடச் சொல்லலாம்.

அந்த அளவுக்குப் பிள்ளையார் நம் நாட்டில் கண்கண்ட கடவுளாக, வீடுகள், ஆற்றங்கரை குளத்தங்கரைகள், தெருக்கள், மரத்தடிகள் ஆகிய எல்லாவிடங்களிலும் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்றார்.

இப்படி அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி நிற்கும் பிள்ளையாரை எல்லாரும் வழிபடுகிறோம். வழிபடுகிறோமேயன்றி ஏன் வழிபடுகிறோம்? பிள்ளையார் யார்—அவர் தோற்றம் என்ன—பிள்ளையார் சுழி ஏன் போடுகிறோம்? தோப்புக் கரணம் எப்படித் தோன்றியது? என்ற விவரங்களை நம்மில் பலர் அறிவதில்லை.

எனவே, இப்படிப்பட்ட செய்திகளையும் பிள்ளையார் வழிபாட்டிற்குரிய பாடல்களையும் வழிபடு முறைகளையும் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதே இச்சிறு வெளியீடு.

அடியவர்கள் இதனை வாங்கிப் படித்துப் பிள்ளையார் அருள் பெறுவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பிள்ளையார் சதுர்த்தி

விநாயகர் வழிபாட்டிற்கு ஏற்ற நாள் வெள்ளிக்கிழமை. அதிலும் வைகாசித் திங்கள் வளர்பிறையில் வரும் முதல் வெள்ளிக்கிழமையில் தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் தொடர்ந்து நோன்பு (விரதம்)இருப்பது நலம்.

கிழமைகளில் எப்படி வெள்ளிக்கிழமை முக்கியமானதோ அப்படியே திதிகளுள் சதுர்த்தி திதி விநாயகருக்கு மிகவும் பிடித்தமான நாள். மாதந்தோறும் வளர்பிறை நாளில் சதுர்த்தி நோன்பு இருக்கலாம். இதில் முக்கியமானது ஆவணி மாத வளர்பிறை நாளில் வரும் சதுர்த்திதான் 'பிள்ளையார் சதுர்த்தி' ஆகும். இந்த சதுர்த்தி விழா நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. அன்றுதான் விநாயகருக்குச் சிறப்பான வழிபாடுகள், விழாக்கள் எல்லாம் நடைபெறும். விநாயகருக்குப் பிடித்தமான பண்டங்கள் மலர்கள் யாவை என்பதை நாம் அறிந்து அன்று அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

ஆவணி வளர்பிறை சதுர்த்தியே 'பிள்ளையார் சதுர்த்தி'

பிள்ளையார் சுழி

எதையும் எழுதத் துவங்குவோர் தாம் மேற்கொள்ளும் செயல் செம்மையாக முடியவேண்டும் என்பதற்குப் பிள்ளையாரின் துணைவேண்டி இச் சுழியினைப் போடுகிறார்கள். பிள்ளையாரின் வடிவம் ஓங்கார வடிவம். அந்த ஓங்கார எழுத்து மருவிப் பிள்ளையார் சுழியாயிற்று என்பர் சிலர்.

ஒலிவடிவமும் வரிவடிவமும் சேர்ந்து எழுத்தாகிறது. ஒலி வடிவைக் குறிப்பது வட்டம் '0'. வரிவடிவைக் குறிப்பது கோடு. இந்த இரண்டும் சேர்ந்துதான் பிள்ளையார் சுழியாயிற்று. ஒலிவடிவம்'நாதம்'என்றும் வரிவடிவம் 'விந்து'என்றும் சொல்லுவார்கள். உயிரும் உலகமும் உண்டாக இவ்விரண்டும்வேண்டும். இந்த எண்ணங்களெல்லாம் சேர்ந்து உள்ளத்தை அசைக்க- உள்ளம் நம்முடைய கையை அசைக்க உருவாவதுதான் பிள்ளையார் சுழி.

பலவகைக் கருத்துகள் நிலவியபோதிலும் எழுத்துப் பணி முட்டின்றி முடிய 'கடவுளை வேண்டி' அஃதாவது சக்தியையும் சிவனையும் வேண்டி இடப்படும் குறியே 'பிள்ளையார் சுழி' ஆகும்.

உருவின் தத்துவம்

யானைத்தலையும் பெருவயிறும் மனித உடலும் ஐந்து கைகளும் கூடிய ஒரு விந்தையான வடிவம் பிள்ளையார் வடிவம்.

பிள்ளையாருக்கு இடையின் கீழே மனித உடம்பு; இடைக்குமேல் கழுத்துவரை தேவ உடம்பு; மேலே விலங்கின் தலை; ஒரு கொம்பு ஆண் தன்மையையும் மற்றொன்று பெண் தன்மையையும் குறிக்கும். யானைத்தலை அஃறிணை; தெய்வ உடம்பு உயர்திணை. இவற்றை உற்றுநோக்கி ஆராய்ந்தால் பிள்ளையார் தேவராய்—மனிதராய் — விலங்காய் — ஆணாய் — பெண்ணாய்--உயர்திணையாய் — அஃறிணையாய் விளங்குகிறார் என்ற உண்மை புலப்படும்.

உலகங்களனைத்தையும் தம்முள் அடக்கியிருப்பவர் என்பதைக் குறிக்கவே அவருக்குப் பெருவயிறு அமைந்திருக்கிறது துதிக்கை வலப்புறம் திரும்பி இருத்தல் வலம்புரி விநாயகர் என்பதைக் குறிக்கும்.

பிள்ளையார் பூசை கைமேற் பலன்

ஐந்து திருக்கைகள் !

கும்பம் ஏந்திய கை ஆக்குந்தொழிலையும், மோதகம், ஏந்திய கை காத்தல் தொழிலையும், அங்குசம் ஏந்திய கை அழித்தல் தொழிலையும், பாசம் ஏந்திய கை மறைத்தல் தொழிலையும். தந்தம் ஏந்திய கை அருளல் தொழிலையும் புரிகின்றன. இப்படியாக ஐந்தொழில் புரிந்து உயிர்களுக்கு அருள் புரிகின்றார் விநாயகர் என்பதைக் காட்டவே விநாயகருக்கு ஐந்து திருக்கைகள் அமைந்துள்ளன.

விநாயகர் என்ற சொல்லுக்குச் 'சிறந்த தலைவர்' என்பது பொருள். 'வி' என்றால் சிறப்பு. 'நாயகர்' என்றால் தலைவர் என்பது பொருள்; இரண்டும் சேர்ந்து 'விநாயகர்' ஆயிற்று.

விநாயகருக்குப் பிடித்தமான பண்டங்கள் :

மோதகம், அப்பம், அவல், பொரி, கடலை, கரும்பு, மா-பலா-வாழைப் பழங்கள், நாவற்பழம், விளாங்கனி, தேங்காய், இளநீர், அவரை, துவரை, சுண்டல், சுழியம், பிட்டு, பொங்கல், எள்ளுருண்டை, வடை, பாயசம், அப்பளம், தேன், கற்கண்டு, சர்க்கரை, தினைமாவு, பால், பாகு முதலியன.

ஔவையார் அருளிய

விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூடிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்தே

திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறு தாரத் தங்கிசை நிலையும்
பேறு நிறுத்திப் பேச்சுரை யறுத்தே

இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி

என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லை இல்லா ஆனந் தமளித்
தல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

காசிப முனிவர் அருளிய

விநாயகர் கவசம்

நாடோறும் தூய்மையான நிலையில் இருந்து ஓதுபவர்கள்
நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்றுப் பல்லாண்டு
நல்வாழ்வு வாழ்வதோடு தலைமுதல் கால் வரை
அவருடைய உறுப்புகளும் காக்கப்படுவர்.

வளருந்தலைமுடி, தலை, நெற்றி, புருவம், இணைவிழிகள்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா யகர்காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக மகோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரறநெற் றியைஎன்றும் விளங்கியகா சிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வில்மகோ தரர்காக்க தடவிழிகள் பாலசந் திரனர் காக்க. (1)

உதடு, நாக்கு, முகவாய்க்கட்டை, வாக்கு, பல், காது, மூக்கு

கவின்வளரும் அதரம்கச முகர்காக்க தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்கநனி வாக்கைவிநா யகர்தாம் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க அள்ளெழிற்செஞ் செவிபாச பாணி காக்க
தவிர்தலுறு திளங்கொடிபோல் வளர்மணிநா சியைச்சிந்தி தார்த்தர் காக்க.

முகம், கழுத்து, இணையான தோள்கள், முலை, உள்ளம், வயிறு

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி காக்ககளம் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கஅகட் டினைத்துலங்கே ரம்பர் காக்க. (3)

பக்கங்கள், குறி, குய்யம், தொடைகள்

பக்கம்இரண் டையுந்தரா தரர்காக்க பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம் வியாளபூ டணர்தாம் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்கசக னத்தை அல்லல்
உக்ககண பன்காக்க ஊருவைமங் களமூர்த்தி உவந்து காக்க. (4)

முழங்கால், இருகால்கள், இருகைகள், முன்கைகள்

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்கஇரு பதம்ஏக தந்தர் காக்க
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூ ரகர்காக்க விரல்பதும அத்தர் காக்க
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர்காக்க கிழக்கினிற்புத் தீசர் காக்க. (5)

திக்குகள் அனைத்திலிருந்தும்

அக்கினியிற் சித்தீசர் காக்கஉமா புத்திரர்தென் ஆசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன் னன்காக்க திகழ்உ தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கில் ஈசநந் தனரே காக்க. (6)

பகல், இரவு முதலிய காலங்களில் பிற தொல்லைகளிலிருந்தும்

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்கஇர வினும்சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கஇராக் கதர்பூதம் உறுவே தாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்த்திறத்தால் வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபபா சாங்குசர்தாம் விரைந்துகாக்க.(7)

மானம், புகழ், முதலியவற்றையும் உற்றார் உறவினரையும்

மதிஞானம் தவம்தானம் மானம்ஒளி புகழ்குலம்வண் சரீரம் முற்றும்
பதிவான தனம்தானி யம்கிருகம் மனைவிமைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்துசர்வா யுதர்காக்க காமர்பவுத் திரர்முன் னன
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர் எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க. (8)

படிப்போர் நோயற்றவராய் வாழ்வர்

வென்றிசீ விதம்கபிலர் காக்ககரி யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்ஓ திடினும்பால் இடையூ றென்றும்
ஒன்றுறா முனிவரர்காள் அறிமின்கள் யாரொருவர் ஓதி னாலும்
மன்றஆங் கவர்தேகம் பிணியறவச் சிரதேக மாகி மன்னும். (9)

(கவசம் முற்றிற்று)

துன்பம் களைபவர் வலிவலம் விநாயகர்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே. —தேவாரம்

அறிவின் திருவுருவம் பிள்ளையார்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே. —திருமந்திரம்

* பிள்ளையார் வழிபாடு–108 போற்றி

திருச்சிற்றம்பலம்

ஓம்எனும் பொருளாய் உள்ளோய் போற்றி
பூமனும் பொருள்தொறும் பொலிவாய் போற்றி
அகரம் முதலென ஆனாய் போற்றி
அகர உகர ஆதி போற்றி
5. மகரமாய் நின்ற வானவ போற்றி
பகர்முன் னவனாம் பரனே போற்றி
மண்ணாய் விண்ணாய் மலர்ந்தாய் போற்றி
கண்ணுள் மணியாய்க் கலந்தாய் போற்றி
நீர்தீக் காற்றாய் நின்றாய் போற்றி
10. கார்குளி ராகக் கனிந்தாய் போற்றி
பகலவன் நிலவாய்ப் பரந்தாய் போற்றி
நிகர்மீன் கணமாய் நிலைத்தாய் போற்றி
மழைபொழி இமய வல்லிசேய் போற்றி
தழைசெவி எண்தோள் தலைவ போற்றி

** இசைத்தட்டில் வெளிவந்துள்ளது—HMV-7FPE 1718-
பாடியவர் சீதாமணி சீனிவாசன்—13 நிமிடங்கள்*

திங்கட் சடையோன் செல்வ போற்றி
எங்கட் கருளும் இறைவா போற்றி
அறுமுகச் செவ்வேட்கு அண்ணா போற்றி
சிறுகண் களிற்றுத் திருமுக போற்றி
செம்பொன் மேனிச் செம்மால் போற்றி
உம்பர் போற்றும் உம்பல் போற்றி
பண்ணியம் ஏந்துகைப் பண்ணவ போற்றி
எண்ணிய எண்ணியாங் கிசைப்பாய் போற்றி
அப்பமும் அவலும் கப்புவாய் போற்றி
முப்புரி நூல்மார்பு அப்பா போற்றி
எள்ளுருண் டைபொரி ஏற்போய் போற்றி
தெள்ளூறு தெவிட்டாத் தேனே போற்றி
மூவர் மொழியிடம் மொழிந்தாய் போற்றி
தேவர்க் கரிய தேவா போற்றி
மாலுக் கரிய மதகரி போற்றி
பாலெனக் கடல்நீர் பருகினாய் போற்றி
பாரதம் எழுதிய பருஉக்கர போற்றி
மாரதம் அச்சொடி மதவலி போற்றி

மாங்கனி அரன்பால் வாங்கினோய் போற்றி
ஈங்கினி எம்பால் எழுந்தருள் போற்றி
35. கரும்பா யிரங்கொள் கள்வா போற்றி
அரும்பொரு ளேயெம் ஐயா! போற்றி
திணைபால் கடந்த தேவே போற்றி
புணையாய் இடர்க்கடல் போக்குவோய் போற்றி
பேழை வயிற்றுப் பெம்மான் போற்றி
40. ஏழைக் கிரங்கும் எம்மிறை போற்றி
அடியவர் உள்ளம் அமர்ந்தாய் போற்றி
அடிமலர் எம்தலை அணிவாய் போற்றி
திருநீற் றொளிசேர் செம்மால் போற்றி
இருவே றுருவ ஈசா போற்றி
45. உள்ளத் திருளை ஒழிப்பாய் போற்றி
கள்ளப் புலனைக் கரைப்பாய் போற்றி
நம்பியாண் டார்க்கருள் நல்லாய் போற்றி
எம்பிரா னுக இசைந்தாய் போற்றி
உருகுவோ ருள்ளத் தொளியே போற்றி
50. பெருகருள் சுரக்கும் பெருமான் போற்றி

தம்பிக்கு வள்ளியைத் தந்தாய் போற்றி
உம்பர்கட் கரசே ஒருவ போற்றி
பிள்ளையார்ப் பெயர்கொண் டுள்ளாய் போற்றி
வள்ளலாய் நலங்கள் வழங்குவாய் போற்றி
55. மூவாச் சாவா முத்தா போற்றி
ஆவா எங்களுக் கருள்வாய் போற்றி
தமிழ்ச்சுவை சார்திருச் செவியாய் போற்றி
அமிழ்தாய் எம்மகத் தானாய் போற்றி
மழவிளங் களிறே மணியே போற்றி
60. குழவியாய்ச் சிவன்மடி குலவுவோய் போற்றி
பெருச்சா ளியூரும் பிரானே போற்றி
நரிச்செய லார்பால் நண்ணாய் போற்றி
செந்தா மரைத்தாள் தேவா போற்றி
நந்தா மணியே நாயக போற்றி
65. இருள்சேர் இருவினை எறிவாய் போற்றி
கரிமுகத் தெந்தாய் காப்போய் போற்றி
ஆங்கா ரம்முனை அறுப்பாய் போற்றி
பாங்கார் இன்பப் பராபர போற்றி

கற்றவர் விழுங்கும் கனியே போற்றி
மற்றவர் காணு மலையே போற்றி
சொல்லொடு பொருளின் தொடர்பே போற்றி
கல்லும் கரைக்க வல்லோய் போற்றி
தொந்தி வயிற்றுத் தந்தி போற்றி
முந்திய பொருட்கு முந்தியோய் போற்றி
ஐந்துகை யுடைய ஐய போற்றி
ஐந்தொழில் ஆற்றும் அமர போற்றி
அருளாய் அருள்வாய் ஆண்டவ போற்றி
தருவாய் மணமலர்த் தாராய் போற்றி
கயமுக அசுரனைக் காய்ந்தாய் போற்றி
மயலறும் இன்ப வாழ்வே போற்றி
ஆனையாய்ப் புழுவாய் ஆனாய் போற்றி
பானை வயிற்றுப் பரமே போற்றி
கடம்பொழி யானைக் கன்றே போற்றி
மடம்ஒழி அறிவின் வளனே போற்றி
பாலொடு தேனும் பருகுவோய் போற்றி
மேலொடு கீழாய் மிளிர்வோய் போற்றி

எய்ப்பில் வைப்பாய் இருந்தோய் போற்றி
மெய்ப்பொருள் வேழ முகத்தாய் போற்றி
நல்லார்க் கெட்டும் நாதா போற்றி
பொல்லா மணியே புராதன போற்றி
அறிவின் வரம்பை அகன்றாய் போற்றி
குறிகுணங் கடந்த குன்றே போற்றி
எட்டு வான்குணத் தெந்தாய் போற்றி
கட்டறு களிற்று முகத்தோய் போற்றி
மலரில் மணமாய் வளர்ந்தாய் போற்றி
அலர்கதிர் ஒளியின் அமர்வோய் போற்றி
ஓங்கா ரம்முகத் தொருத்தல் போற்றி
ஏங்கா துயிர்க்கருள் இயற்கை போற்றி
எண்ணும் எழுத்துமாய் இசைந்தாய் போற்றி
பண்ணும் பயனுமாய்ப் பரந்தாய் போற்றி
அருவே உருவே அருவுரு போற்றி
பொருளே பொருளின் புணர்ப்பே போற்றி
புகர்முகக் களிற்றுப் புண்ணிய போற்றி
அகலிடம் நிறைய அமர்ந்தோய் போற்றி

105. செல்வம் அருள்க தேவா போற்றி
நல்லன எமக்கருள் நாயக போற்றி
ஆக்கமும் ஊக்கமும் அருள்வாய் போற்றி
108. காக்களங் கனையுன் கழலிணை போற்றியே.

திருச்சிற்றம்பலம்

நான் தருவேன் நான்கு ! நீ தருவாய் மூன்று !!

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா. —நல்வழி

சார்ந்தார்க்குக் குன்று நலமும் குறைவில்லாச் செல்வமும் பெருகும்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு. —மூதுரை

பல்பெயர்க் கோவை

சிந்தித் தவர்க்கருள் கணபதி போற்றி
சீரிய ஆனைக் கன்றே போற்றி
அன்புடை அமரரைக் காப்பாய் போற்றி
ஆவித் துணையே கணபதி போற்றி
இண்டைச் சடைமுடி இறைவா போற்றி
ஈசன் தந்தருள் மகனே போற்றி
உன்னிய கருமம் முடிப்பாய் போற்றி
ஊர்நவ சந்தி உகந்தாய் போற்றி
எம்பெரு மானே இறைவா போற்றி
ஏழுல குந்தொழ நின்றாய் போற்றி
ஐயா கணபதி நம்பியே போற்றி
ஒற்றை மருப்புடை வித்தகா போற்றி
ஓங்கிய ஆனைக் கன்றே போற்றி
ஔவிய மில்லா அருளே போற்றி
அக்கர வத்து ஆனவா போற்றி
கணபதி என்வினை களைவாய் போற்றி

ஙப்போல் மழுவொன் றேந்தியே போற்றி
சங்கரன் மகனே சதுரா போற்றி
ஞயநம் பினர்பா லாடியே போற்றி
இடம்படு விக்கின விநாயகா போற்றி
இணங்கிய பிள்ளைகள் தலைவா போற்றி
தத்துவ மறைதெரி வித்தகா போற்றி
நன்னெறி விக்கின விநாயகா போற்றி
பள்ளியி லுறைதரும் பிள்ளாய் போற்றி
மன்று ளாடும் மணியே போற்றி
இயங்கிய ஞானக் குன்றே போற்றி
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் போற்றி
இலகக் கொம்பொன் றேந்தியே போற்றி
வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் போற்றி
அழகிய ஆனைக் கன்றே போற்றி
இளமத யானை முகத்தாய் போற்றி
இறகுபதி விக்கின விநாயகா போற்றி
அனந்தலோ டாதியின் அடிதொழ வருளே.

———

கபிலதேவ நாயனர்

உருவுந் திருவும் பெருகும்

திருவாக்கும்; செய்கருமம் கைகூட்டும்; செஞ்சொற்
பெருவாக்கும், பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானேரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

வினைகளை வேரறுக்கும் விநாயகர்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினுல்
கண்ணிற் பணிமின் கனிந்து.

தொழுதல் நல்லோர் கடமை

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும்—அளியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்ருள்
நண்ணுவதும் நல்லார் கடன்.

நம்பியாண்டார் நம்பிகள்

அடியார் அகத்தான்

முகத்தாற் கரியனென் றுலுந் தனையே முயன்றவர்க்கு
மிகத்தான் வெளியனென் றேமெய்ம்மை உன்னும் விரும்படியார்
அகத்தான் திகழ்திரு நாரையூர் அம்மான் பயந்த எம்மான்
உகத்தா னவன்ற னுடலம் பிளந்த ஒரு கொம்பனே.

நமன்தமர் நலிவு செய்யார்

கோவிற் கொடிய நமன்றமர் கூடா வகைவிடுவன்
காவிற் றிகழ் தி நநாரைப் பதிபிற் கரும்பனைக்கை
மேவற் கரிய வி நமதத் தொற்றை ம நப்பின் முக்கண்
ஏவிற் புருவத் திமையவள் தான்பெற்ற யானையையே.

அமரா மனத்தவர் ஆழ்நரகு அடைவர்

அமரா ! அமரர் தொழுஞ்சரண் நாரைப் பதியமர்ந்த
குமரா ! குமரற்கு முன்னவனே ! கொடித் தேரவுணர்
தமரா சறுத்தவன் றன்னுழைத் தோன்றினனே ! எனநின்
றமரா மனத்தவர் ஆழ்நர கத்தி லழுந்துவரே.

கவலை தீரக் கணபதியைத் தொழுவோம்

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற் றிற்பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்—நல்ல
குணமதிக மாம்அருணைக் கோபுரத்துண் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால். —விவேகசிந்தாமணி

சீரும் சிறப்பும் பெறப் பிள்ளையாரைப் போற்றுவோம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம். —விருத்தாசலபுராணம்

எண்ணிய பொருள்கள் எளிதிற் கைகூடும்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம். —கந்தபுராணம்

அண்ணுமலையில் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்
முருகனுக்குத் திருமணஞ் செய்வித்தவர் விநாயகனே!

லகத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணமருள் பெருமானே.

ஏன் குட்டிக் கொள்ளுகிறோம்?

பிள்ளையார் திருமுன் நின்று வணங்கும்போது இரண்டு கைகளாலும் தலையில் குட்டிக் கொள்ளுகிறோம். ஏன்?

வடக்கேயிருந்து ஒருநாள் அகத்தியர் தம்முடைய கமண்டலத்தில் கங்கை ஆற்றுநீரை அடைத்துக்கொண்டு தெற்கே வந்தார். குடகு மலையில் அமர்ந்து கமண்டலத்தைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு சிவபூசை செய்துகொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் இந்திரன் சீகாழியில் மறைந்திருந்து பூசை செய்துகொண்டிருந்தான். நெடுநாள் மழையில்லாமையால் பூசைக்குப் பூ கிடைக்கவில்லை. இதற்கு என்ன செய்வது என்று இந்திரன் கலங்கினான். அப்போது அங்கு வந்த நாரதர் அகத்திய முனிவருடைய கமண்டலத்திலிருக்கும் நீரை வெளியில் பாயும்படி செய்தால் நந்தவனம் செழிக்கும் என்றார்.

உடனே இந்திரன் பிள்ளையாரை வழிபட்டு அகத்தியரின் கமண்டல நீரை வெளியேற்றும்படி வேண்டினான். பிள்ளையார்

காக்கை வடிவில் சென்று கமண்டலத்தின்மீது அமர்ந்தார். அகத்தியர் காக்கையைக் கையசைத்து விரட்டினார். காக்கை கமண்டலத்தைக் காலால் உந்திவிட்டுப் பறந்தது. கமண்டலம் கவிழ்ந்தது. கமண்டலநீர் காவிரியாகப் பெருக்கெடுத்தது.

அகத்தியர் காக்கையைச் சீறினார். காக்கை ஒரு சிறுவனாக உருமாறி நின்றது. சிறுவனை இரண்டு கைகளாலும் தலையில் குட்ட ஓடினார் அகத்தியர். சிறுவனும் ஓடினான். அகத்தியர் மேலும் விரட்டிக்கொண்டே ஓடினார். பிள்ளையார் தம் உண்மை வடிவைக் காட்டவே திகைத்துவிட்டார் அகத்தியர். பின்னர் அவர் பிள்ளையாரை வணங்கி 'ஓங்காரப் பொருளே, உன்னைச் சிறியவன் என்று கருதிக் குட்டவந்த நானே சிறுவன்' என்று சொல்லித் தம் தலையில் குட்டிக் கொண்டார்.

பிள்ளையார், 'அன்பனே இன்று முதல் எம்திருமுன் பக்தியுடன் நின்று தம் தலையில் குட்டிக் கொள்வோர் கூரிய அறிவும், சீரிய செல்வமும் பெற்று வாழ்வர்' என்றார். அதுமுதல் ஏற்பட்டதுதான் இந்தக் குட்டிக் கொள்ளும் வணக்கமுறை.

விநாயகரின் படைக்கலன் : அங்குசம், சக்தி, அம்பு, வில், கேடயம், நாகபாசம், சூலம், மழு, கோடரி, சங்கம், குந்தாலி.

தோப்புக்கரணம் ஏன்?

எடுத்த செயல் நிறைவேறவேண்டி, பிள்ளையார் முன் இரு காதுகளையும் இரு கைகளாலும் மாறிப் பிடித்துக் கொண்டு வணங்கித் தோப்புக்கரணம் இடுகிறோமே - கதை கேளுங்கள்.

'கய முகன்' என்னும் ஆனைமுக அசுரன் தவம் செய்து சிவபெருமானிடம் மிகப் பல வரங்களைப் பெற்றான். அதனால இந்திரன், பிரமன் மற்றுமுள்ள தேவர்களை யெல்லாம் படாத பாடு படுத்திக் கொண்டிருந்தான். காலை—உச்சி-மாலை-ஆகிய மூன்று வேளைகளிலும் இந்தத் தேவர்கள் தன்முன் வந்து தோப்புக்கரணம் போடவேண்டும் என்று ஆணையிட்டிருந்தான்.

இந்தத் தொல்லை பொறுக்க முடியாத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள். சிவபெருமான் ஆனைமுக அசுரனை அடக்கி, தேவர்களுக்குத் தண்ணருள் புரியும்படி பிள்ளையாருக்குக் கட்டளையிட்டார். பிள்ளையாரும் அந்த அசுரனைக் கொல்லத் தம் பூத கணங்களுடன் போருக்குப் புறப்பட்டார்.

அமெரிக்காவில் விநாயகர்

இந்நூற்றாண்டில் அமெரிக்காவில் விநாயகருக்குக் கோயில் கட்டியவர் விவேகானந்த அடிகள் ஆவர்.

போர் கடுமையாக நடைபெற்றது. கயமுகன் சாகா வரம் பெற்றவனாதலால் அவனை எளிதில் கொல்ல முடியவில்லை. பார்த்தார் பிள்ளையார்; தம்முடைய வலக்கொம்பை ஒடித்தார். சில மந்திரங்களை உச்சரித்து அவன்மீது ஏவினார். அக்கொம்பு அவனுடைய உடலைப் பிளந்தது. ஆயினும் அவன் சாகவில்லை. பெருச்சாளியின் வடி வெடுத்து வந்து மீண்டும் எதிர்த்தான்.

இனி இவனைக் கொல்ல முடியாது. மெய்யறிவு புகட்டிக் கருணை புரிவோம் என எண்ணி விநாயகர் அவனுக்கு அருள் புரிந்தார். அவனும் அறிவு திருந்தப் பெற்றான். 'ஐயனே யான் உமக்கு அடிமை' என அடிபணிந்தான். பெருச்சாளி வடிவில் இருந்த அவன் அகந்தை அடங்கியமையால் அவனைத் தமக்கு ஊர்தியாகக் கொண்டார் பிள்ளையார்.

தேவர்கள் மகிழ்ந்தனர். பிள்ளையாரை வணங்கி அருள் செய்ய வேண்டினர். தாங்கள் அசுரனுக்குத் தோப்புக்கரணம் இட்டதுபோல 1008 முறை இட்டனர். அது கண்ட பிள்ளையார் அவ்வளவு தோப்புக்கரணம் போட வேண்டியதில்லை என்றும் மூன்று முறை போட்டால் போதும் என்றும் கூறினார். அதிலிருந்தே தோப்புக்கரணம் போடும் பழக்கம் ஏற்பட்டது.


விநாயகரை வழிபடும் நாடுகள்

விநாயகர் தமிழ் நாட்டுக்கு மட்டும் உரிய கடவுளல்லர். விநாயகர் வழிபாடு வெவ்வேறு பெயர்களில்—உருவங்களில் இந்தியத் துணைக் கண்டத்திலும், சாவகம், பாலி, போர்னியோ, திபேத், பர்மா, சயாம், சீனு, சப்பான், இந்தோசீனு மற்றும் தமிழர் வாழும் அயல்நாடுகளிலெல்லாம் விநாயகருக்குக் கோவில்களும் வழிபாடுகளும் உள்ளன.


சீனுவில்	பிள்ளையாருக்குப் பெயர்	'க்வான்ஷிடியிக்'
சப்பானில்	பிள்ளையாருக்குப் பெயர்	'விஞயக்ஷா'
		'க்வான்ஷன்-ஷேர்'
பர்மாவில்	பிள்ளையாருக்குப் பெயர்	'மகாபிணி'
கம்போடியாவில்	பிள்ளையாருக்குப் பெயர்	'ப்ரா கணேஷ்'
மங்கோலியாவில்	பிள்ளையாருக்குப் பெயர்	'தோத்கார்-அவுன் காகாள்'

சீனுவில் 'யானைமுகக் கடவுள்' திருவுருவம் வடிக்கப் பட்டது ஆருவது நூற்ருண்டு ஆகும்.

சப்பானில் 'இடர் களையும் பிள்ளையார்' வழிபாட்டை ஒன்பதாம் நூற்ருண்டில் துவக்கியவர் 'கோபாதெய்சி'.



அருள்மிகு
செல்வவிநாயகர்
சென்னை



ஆலமரத்தில் இயற்கை விநாயகர்

சென்னை, இராசாசி மண்டபத்தின் மேல்புறமுள்ள ஆலமரத்தில் இயல்பாய்த் தோன்றியுள்ள திருவுருவம்.

அப்பர் அச்சகம், சென்னை-1.

உள்நாடு: 40 காசு வெளிநாடு: 60 காசு